**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.952/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 3 |
| Name | : | பாலமுருகன், வயது 43 |
| Father Name/Husband Name | : | பாலகிருஷ்ணன் |
| Village | : | பீக்கிலிபட்டி |
| Taluk | : | எட்டயபுரம் |
| Calling | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of March 2026.

**(Accused present.)**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது பீக்கிலிபட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது தம்பி முறை. அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது பெற்றோர்கள். கடந்த 11.05.2025 ஆம் தேதி காலை 07.30 மணியளவில் எனது அம்மா ஆவுடையம்மாள் கழிவு நீர் எடுத்துக் கொண்டு வரும்போது ஆஜர் எதிரி தேவடியா, அந்த தேவடியா என்று அசிங்கமாக பேசி, கல்லை கொண்டு எனது அம்மாவை எறிந்தும், சேலையை பிடித்து பரபரவென்று இழுத்து கீழே தள்ளிவிட்டார். பின்னர் எனது கையை ஆஜர் எதிரி கத்தியால் அறுத்துவிட்டார். பின்னர் ஆம்புன்ஸ் மூலம் நான், எனது அப்பா மற்றும் எனது அம்மா ஆகியோர் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2 நானும் 108 ஆம்புன்ஸ் மூலமாக எனது பெற்றோருடன் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து ஒரு வாரம் மருத்துவமனையில் இருந்தேன். நான் ஒரு வாரம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து எதிரி எனது கையில் வெட்டியதாக போலீசார் விசாரணையில் சொன்னீர்களா என்றால் சொன்னேன். நான் தனியாக புகார் கொடுக்கவில்லை. எனக்கு மயக்கம் தெளிந்து மூன்று நாட்கள் கழித்து நான் போலீசாரிடம் நடந்தததை சொன்னேன். மூன்று நாட்களும்

எனக்கு மயக்கம் தெளியவில்லை என்பதால் மருத்துவமனையில் என்ன நடந்தது என்று தெரியாது.

3 எதிரியும் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் இடது கையிலும், நெற்றியிலும், தலையிலும் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் எனக்கு தெரியாது. நானும், எனது பெற்றோர்களும், அன்னலட்சுமியும் சேர்ந்து அரிவாள், கம்பு மற்றும் கல்லால் எதிரியை தாக்கியதாக எதிரி புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. விஜயகுமார் மற்றும் மதன்குமார் எனது மருமகன்கள். நான் மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்த மறுநாள் மேற்படி இருவரும் எதிரியை தாக்கி காயப்படுத்தினார் என்றால் நான் மயக்கமாக இருந்ததால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் அறிவேன் சாட்சி கையொப்பத்தை புகார்வாக்குமூலத்தில் நான் மூன்று நாட்கள் கழித்துதான் செய்தேன் என்றால் சரிதான்.

4 நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நாங்கள் தான் குடும்பத்தினருடன் சேர்ந்து எதிரியை பலமுறை அடித்து காயப்படுத்தினோம் என்றாலும் சரியல்ல. நான் சொன்னது போல் எதிரி எனது அம்மாவை கல்லால் எறிந்து, சேலையை பிடித்து இழுத்து, அசிங்கமாக பேசவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி என்னை கத்தியால் கையில் காயம் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் மற்றும் குடும்பத்தார்கள் எதிரியை அடித்து காயப்படுத்திவிட்டு அந்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக அ.சா.1, 2 மருத்துவமனையில் சேர்ந்து பொய் புகார் கொடுத்தற்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.